# இணையத்தில் தமிழ் பாடத்திட்டத்தின் வெற்றி

சுகந்தி நாடார்

**Harrisburg University and SRM University**

இன்று தமிழ் பாடத்திட்டங்கள் இணையத்தில் வெற்றி பெற்றுள்ளதா இல்லையா என்று கேட்டால் இல்லை என்று அழுத்தமாகக கூறமுடியும்.ஏன் என்றால் இணையம் என்ற ஒரு சாதனத்தைத் தமிழ் மொழி இன்னும் சரியாகப் பயன் படுத்திக் கொள்ளவில்லை என்று தான் சொல்ல வேண்டும். தமிழ் பாடத்திட்டங்களை இணையத்தில் எவ்வாறு வெற்றி அடையச் செய்வது என்று இந்தக் கட்டுரை ஆராய்கிறது.

அடிப்படையான மழலைக் கல்வி இணையத்தில் வெற்றிகரமாக அமைந்தால் தான் நாம் மற்றப் பாடத்திட்டங்களை வெற்றிகரமாக இணையத்ஹ்டிற்கு எடுத்துச் செல்ல முடியும். அதனால்இந்த ஆராய்ச்சிக்காகத் தற்போது இணையத்தின் வழி கிடைக்கும் தமிழ் இணையப் பல்கலைக்கழக மழலைக் கல்வி பாடங்களையும், தொடக்க நிலை தமிழ் நாட்டு அரசு பாடநூல்களின் முதல் வகுப்புப் பாடங்களையும் மாதிரிக்கு எடுத்து அமெரிக்கத் தேசத்திலிருக்கும் The International ssociation for K-12 Online Learning (iNACOL) என்ற நிறுவனத்தின் வரைமுறைகளை அளவு கோலாகக் கொண்டு பாடத்திட்டத்தில் வகுக்கப்பட்ட குறிக்கோள்கள் மாணவர்களைச் சென்று அடைந்ததா என்று ஆய்வதுடன் தமிழ் பாடத்திட்டங்கள் இணையத்தில் வெற்றி பெற என்ன செய்ய வேண்டும் எனத் தீர்வினையும் இந்தக் கட்டுரை கொடுக்க முயல்கிறது.

.

திரு இராமசாமி நினைவு பல்கலைக் கழகத்தின் அயலகத் தமிழாசிரியர் பட்டயப் படிப்பில் மழலைக் கல்விக்கு அடிப்படையான குறிக்கோள் குழந்தைகளின் கேட்டல் திறனையும் அடையாளப்படுத்தும் திறனையும் வளர்த்தல் என்று குறிப்பிடப்படுகிறது.இந்தக் குறிக்கோளைத் தமிழ் இணையப் பல்கலைக்கழக மழலைக் கல்வி பாடங்களும் தொடக்க நிலை தமிழ் நாட்டு அரசு பாடநூல்களின் முதல் வகுப்புப் பாடங்களும் அடைந்தனவா என்று ஆராயப்படும். மாணவர்களின் செயல் திறனைக் கணினி மூலம் வளர்க்கும் வழிகள் பாடத்திட்டத்தில் உள்ளதா என்றும் பார்க்கப் படும்

ஒரு பாடத்திட்டத்தின் குறிக்கோள் மிகத் துல்லியமாக இருந்தால் மட்டுமே அந்தப் பாடத்திட்டம் சரியான முறையில் மாணவர்களைச் சென்று அடையும். புத்தகத்தைப் படித்து ஆசிரியர் கூறியதை அப்படியே மனப்பாடம் செய்து அவர் கொடுக்கும் தேர்வில் அதிகம் மதிப்பெண் பெறுவதில் ஒரு மாணவரின் உணமையான வெற்றியை அளவிட முடியாது என்பதைத் தமிழ் மொழி கற்பிப்பவர்களும் கற்பவர்களும் உணர்ந்தே உள்ளனர். வகுப்பறையில் படிக்கும் மொழிக் கல்வி வகுப்பறைக்கு வெளியே ஒரு மாணவர்க்கு வெற்றி தேடித் தருவதாக இருந்தால் மட்டுமே கொடுக்கப்படும் மொழிக் கல்வி மதிக்கப்படும் என்பது அனைவரும் அறிந்ததே. எனவே மாணவர்களின் தேவையைச் சுட்டிக்காட்டி. மாணவர்களுக்கு எந்த மாதிரியான அடிப்படை அறிவு

தேவை என்ற விளக்கமும் மாணவர்கள் குறிக்கோளை அடையப் படிப்படியான வழிகளையும் அவர்கள் தேர்ச்சியை நிஜ வாழ்க்கையில் அடுத்தவரின் உதவி இன்றி எப்படிச் செயல் படுத்துகின்றனர் என்ற முற்றாய்வையும் கொண்டதே ஒரு இணையப் பாடத்திட்டத்தின் சிறந்த குறிக்கோள் ஆக இருக்க வேண்டும்..

தொடக்க நிலை பாடத்திட்டம் என்று வரும் போது ஆசிரியரின் துணை இல்லாமல் குழந்தைகளால் கற்க முடியாது என்றாலும் இணைய வழிப்பாடம் என்று வரும் போது மாணவர்கள் தன்னுரிமையாகச் செயல்பட வேண்டும் என்பதை மனதில் கொண்டே பாடத்திட்டங்கள் எழுதப்பட வேண்டும் அமெரிக்காவில் இருக்கும் The International ssociation for K-12 Online Learning என்ற நிறுவனம் ஒரு பாடத்திட்டம் எப்படி இருக்க வேண்டும் என்று வரையறை செய்து உள்ளது.

நிறுவனத்தின் கருத்து படி இணையக் கல்வியின் நோக்கம் ஒரு தனிப்பட்ட மாணவனின் திறமையை வெளிப்படுத்து வளர்க்கும் வண்ணம். மின்னியல் வளங்கள் பயன் படுத்த பட வேண்டும் என்பது தான். மேலும் இணையம் மூலம் கல்வி கற்பிப்பதன் மூலம் வகுப்பறைக்குள்ளும் மின்னியல் வளங்களைக் கொண்டு வர முடியும் என்பது தான். மின்னியல் வளங்களைச் சரியாகப் பயன் படுத்தி மாணவர்கள் தாங்கள் கற்றவற்றை எவ்வாறு வகுப்பறைக்கு வெளியே பயன் படுத்துகிறார்கள் என்பதில் தான் ஒரு பாடத் திட்டத்தின் வெற்றி அமைந்து இருக்கிறது. வகுப்பறையில் கற்பிக்கப்படும் படும் தமிழ் மொழிப் பாடங்கள் ஒருவர் தமிழைத் தங்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் வகையில் இன்று வரை அமையவில்லை என்பது வருந்தத் தக்கது. இந்த நிலை மாற வேண்டும் என்றால் ஒரு பாடத்திட்டத்தை எப்படி அமைக்க வேண்டும் என்பதை ஒரு புதுக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும்.

| | **கற்பித்தலும் மாணவர்கள் பற்றிய ஆய்வு** | **மறுசீராய்வு கருத்து** | **மதிப்பீடு** |
|---|---|---|---|
| | **பாடத்திட்டத்தைப் பற்றியும் மாணவரைப் பற்றியும் ஆய்வு** | | |
| 1 | **பாடத் திட்டம் எல்லா வகையான மாணவர்களின் தேவையையும் ஆராய்ந்து அமைக்கப் பட்டுள்ளது.** | **மாணவர்கள் தங்கள் தேர்ச்சியை உணர்த்தும் வகையில் பல வித்தியாசமான முறையில் கணிப்பீடுகள் அமைக்கப்பட்டுள்ளது.** | |

| | | | |
|---|---|---|---|
| 2 | பாடங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக அறிவுபூர்வமாகப் பிரிக்கப் பட்டு அலகுகளின் குறிக்கோள்கள் பலவகையான பயிற்சிகள், வளங்கள் கணிப்பீடுகள் கொடுக்கப் பட்டுள்ளது. | ஒவ்வொரு அலகின் தொடக்கத்திலும் மாணவர்கள் எதை எப்படிக் கற்றுக் கொள்வார்கள் அவர்களின் தேர்ச்சிக்கான திறமை எவ்வாறு மதிப்பீடு செய்யப்படும் என்று தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. | |
| 3 | குழந்தைகள் தங்கள் செயல்திறனை வளர்க்கும் வகையில் பயிற்சிகள் பல உள்ளன. | மாணவர்களே குழுக்களாகப் பிரிந்து தங்கள் திறமையை மதிப்பீடுகளைச் செய்ய உதவும் பயிற்சிகளும், விளையாட்டுகளும் காணொளிகளைக் கண்டு உரையாட வைப்பதும், பாடச் சாரத்தை வரை படமாக மாணவர்களால் வரைய முடியும்.(concept mapping) | |
| 4 | மாணவர்களின் தேவையை அறிந்து பல்வேறு வழிகளிலும் வித்தியாச முறைகளை ஆசிரியர்கள் பாடம் நடத்துகின்றனர். | பாடம் புரியதா மாணவர்களுக்குப் பாடத்தைப் புரிய வைக்கும் வகையில் வகைவகையான பயிற்சிகள் ஆசிரியர்களால் கொடுக்கப் படுகின்றன. | |
| 5 | மாணவர்கள் மேம்பட்ட வழியில் சிந்திக்கும் வழியில் காரணக் காரியங்களை ஆராய்ந்து செயல் படுத்தும் கற்பிக்கும் பயிற்சிகள் உள்ளன. | கொடுக்கப்படும் பாடங்களும் வீட்டுப் பாடங்களும் பயிற்சிகளும் மாணவர்களின் சிந்திக்கும் திறனை | |

| | | | |
|---|---|---|---|
| | | மேம்படுத்துவதாக அமைந்துள்ளதா என்று பார்க்க வேண்டும். | |
| 7 | குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் பாடப் பயிற்சிகளை மேம்படுத்தும் வகையில் பயிற்சிகள் அமைக்கப்பட்டு இருக்க வேண்டும் | மாணவர்களே படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் பாடங்கள் எழுதப் பட்டிருக்க வேண்டும். | |
| | | | |
| 8 | மாணவர்களும் ஆசிரியரும் ஒருவருக்கு ஒருவர் கருத்து பரிமாறிக்கொள்ள வசதி உள்ளது. மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய கருத்து அவ்வப்போது மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ளப் பட வேண்டும். | கற்பிக்கும் செயல் வகைகள் ஆசிரியர் மாணவர் கருத்து பரிமாற்றம் செய்யும் வகையில் அமைந்து இருக்க வேண்டும். | |
| 9 | பாடங்கள் தொடங்கின முதல் வாரங்களிலேயே மாணவர்களும் ஆசிரியர்களும் கருத்துகளைப் பரிமாறி மாணவர்களின் தேவைகளை ஆசிரியர் புரிந்து கொள்ளும் வசதி இருத்தல் | பாடத் தொடக்கத்தின் போதே ஒவ்வொரு மாணவருடனும் ஆசிரியர் கருத்துகளைப் பரிமாறி மாணவர்கள் பயிற்சிகளை ஆர்வத்துடன் செய்ய வழி வகுக்கப்பட்டு இருக்கிறது. | |
| 10 | பாடங்களுக்கு தேவையான பல வளங்கள் மாணவர்களுக்கு கொடுக்கப் பட்டு இருக்க வேண்டும். | பலவகையான குழு வகை கருத்து பரிமாற்றங்கள் நடைபெற வகை இருக்க வேண்டும். | |

இந்தப் பட்டியலை ஒட்டி நாம் தமிழ் மழலைப் பாடத்திட்டங்களைப் பார்க்கும் போது இவை இன்னும் இணையதளத்திற்குத் தயாராகவில்லை ஆனாலும் தற்போது வழக்கத்தில் இருந்து வரும் பாடத் திட்டங்களை உடனே மாற்றவும் முடியாது. இதனால் முதலீடும் மனித உழைப்பும் வீணாகும்.இதைத் தமிழ் ஆசிரியர்களும் பல மின்னியல் வளங்களை மாணவர்களுக்குத் தங்கள் பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும். தமிழ் ஆசிரியர்கள் இதற்கு நழுவல் காட்சி வில்லைகளைப் பயன் படுத்தலாம். ஏற்கனவே பல ஆசிரியர்களுக்கு இவை பழக்கமாதலால் இதைக் கொண்டு பாடம் நடத்துவதும் மாணவர்களைச் சுயட்சையாக தங்கள் செயல் திறனை வளர்த்து கொள்ளவும் தங்களைத் தாங்களே சுயப் பரிசோதனை செய்து கொள்ளவும் இந்த மென் பொருட்கள்

உதவுகின்றன. இப்போது கிடைக்கும் காட்சி வில்லை மென்பொருட்களில் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் power point மென்பொருள் ஆசிரியர்களுக்கு ஏற்ற படி எல்லா வசதிகளையும் கொண்டுள்ளது காணொளி , ஒலிக் கோப்புகள் இணைக்கும் வசதி தவிர, Actions, Action button animations and triggers ஆகியவை கொண்டு சிறுசிறு விளையாட்டுகளை அமைக்கலாம். இந்த மென்பொருள் மூலம் தயாரிக்கப் படும் காட்சிவில்லைகலை காணொளியாக மாற்றலாம். எல்லா இயங்குதளங்களிலும் கையடக்கக் கணினிகளிலும் இவற்றை எளிதாக இணையம் மூலம்.இதனால் தற்போது இருக்கும் பாடத்திட்டங்களை ஆசிரியர்கள் எளிதில் இணையத்திற்கு எடுத்துச் செல்ல முடியும்.குழந்தைகளையும்காட்சி வில்லைகளைக் காணொளிகளைத் தயாரிக்கச் சொல்லலாம்.

தற்போது இருக்கும் பாடதிட்டஙகை இணையம் வழி கற்றுத்தரச் செய்யப்படும் இந்த எளிய முயற்சிகள் விரைவிலேயே இணையத்தைக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பாடத்திட்டங்களை அமைக்க வழி வகுக்கும்.